## இனிமையான குழந்தைகளே! ஒவ்வொரு அடியிலும் பாபாவின் ஸ்ரீமத்படி நடத்தல், பாபாவின் போதனைகளை தாரணை செய்தலே தன் மீது இரக்கம் காட்டுதல் ஆகும்.

கேள்வி: குழந்தை இராஜா மற்றும் முதியவர் மந்திரி இருவரும் இச்சமயத்தில் ஒருவருக் கொருவர் ஒன்றாக கூடவே இருக்கின்றனர். எப்படி?

பதில்: குழந்தை இராஜா காம விகாரம்! அமைச்சர் கோபம்! இந்த இரண்டிற்கும் இடையில் மிகுந்த ஆழ மான சம்பந்தம் இருக்கிறது. அனைத்து மனிதர்களும் இந்த நேரத்தில் இந்த இரண்டுக்கும் வசமாகி இருக்கிறார் கள். ஒரு வேளை யாராவது பாபாவின் குழந்தை என்று கூறிவிட்டு காமம் அல்லது கோபத்திற்கு வசமாகி விட்டார்கள் என்றால் பாபாவை நிந்திப்பவராகி விடுகிறார்கள். நிந்தனை செய்யும் குழந்தைகள் தனது அதிர்ஷ்டத்தின் குறுக்கே கோடுபோட்டு விடுகிறார்கள். இனிமையான குழந்தைகளே! இந்த எதிரியை வெற்றி அடையுங்கள் என பாபா கூறுகிறார். கோபம் எங்கே இருக்கிறதோ அங்கே பானையில் இருக்கும் தண்ணீர் கூட வற்றிப் போகும் என கோபத்திற்குத் தான் கூறப்படுகிறது.

பாடல்: குழந்தைப் பருவத்தை மறந்து விடாதே.....

ஓம் சாந்தி. சபையில் யார் வந்திருப்பது என்பது குழந்தைகளுக்குத் தெரிகிறது. பாபா மற்றும் தாதா இணைந்து வந்திருக்கின்றனர். ஒரு வேளை சாகாரத்தில் என்றால் பாபா தனியாக தாதா தனியாக இருக்க வேண்டும். இது அதிசயமான அடையாளம் ஆகும். யார் வந்தது? சிவபாபா வந்தார் என்று குழந்தைகளின் புத்தி கூறுகிறது. சொர்க்கத்தைப் படைக்கக் கூடியவர் ஒரு தந்தையே! இருவர் கிடையாது, ஆம் உதவியாளர்கள் நிச்சயமாக கிடைப்பார்கள். அப்பா மற்றும் குழந்தைகள் இரு வராலும் வேலை நடக்கிறது. பாபா அர்ப்பணம் ஆகிறார் என்றால், குழந்தைகளும் அர்பபணம் ஆகின்றார்கள். இந்த தாதாவும் குழந்தையாகி விட்டார்கள் அல்லவா? இங்கே நீங்கள் வகுப்பில் வருகிறீர்கள். சபை என்ற வார்த்தை கூட பொதுவாக இருக்கின்றது. பல்வேறு சபைகள் உள்ளன. இது பகவானின் பாடசாலை ஆகும். உண்மையில் இந்த ஞானத்தைக் கேட்டு கடைபிடித்துக் கொண்டிருக்கிறார்கள், இவர்களுடைய முகம் மலர்ந்துக் கொண்டு இருக்கிறது. கேட்டு கேட்டு குஷியின் அளவு அதிகரிக்கிறது என அனைத்து பக்கமும் பார்க்கப்படுகிறது. எல்லைக்குட்பட்ட தந்தை, ஆசிரியர், குரு கூட இருக்கிறார்கள். இவர் எல்லையற்ற தந்தை டீச்சர் ஆவார். அவர் இன்று உங்களைப் படிக்க வைத்துக் கொண்டிருக்கிறார் என்றால், எவ்வளவு குஷியின் அளவு அதிகரிக்க வேண்டும். குழந்தைகள் நிறைய இருக்கிறார்கள். சிவபகவான் வாக்கு அல்லது சிவாச்சாரியர் என்று கூட சொல்லாம். அவர் ஞானத்தின் கடல் ஆவார். சிவாச்சாரியருக்கு பிறகு சங்கராச்சாரியர் வருகிறார். இரண்டு விதமான சன்னியாசம் இருக்கிறது. இது சதோபிரதானமான தேவி தேவதையாக மாறக் கூடிய சன்னியாசம் ஆகும். சகஜ யோகம் ஆகும். பாபா இந்த தாதாவின் உடலில் வந்திருக்கிறார் என உங்களுக்குத் தெரியும். ஆகவே தான் பாப்தாதா என கூற வேண்டி யிருக்கிறது. பேரக் குழந்தைகள் இருக்கிறார்கள் அல்லவா? அந்த சாகார தந்தை தான் தாத்தா, கொள்ளு தாத்தா ஆகிறார்கள். இங்கே நிராகாரர் தாத்தாவாக இருக்கிறார். பாபா இவருக்குள்

பிரவேசமாகி உங்களுக்கு கூறுகின்றார். யார் பிராமண குலத்தினர் ஆகியிருக்கிறார்களோ அவர்களே ஈஸ்வரனின் வாரிசு ஆகியிருக்கிறார்கள். ஓ, பரம்பிதா பரமாத்மா நாங்கள் உங்களுடையவராக இருந்தோம். பிறகு 84 பிறவிகளின் நடிப்பை நடித்தோம் என கூறுகிறார்கள். எவ்வளவு எளிய விஷயம். லௌகீகத்தில் கூட பாபாவிற்கு 5-7 குழந்தைகள் இருக்கிறார்கள் என்றால், அவர்களில் ஒரு சிலர் கெட்ட குழந்தைகளாகவும் ஆகிவிடுகிறார்கள். இந்த தந்தைக்கு எவ்வளவு குழந்தைகள் இருக்கிறார்கள் என்றால், எத்தனை கெட்ட குழந்தைகள், எவ்வளவு நல்ல குழந்தைகள்! சிலருக்குள் காமம், சிலருக்குள் கோபம் பிரவேசம் ஆகிறது. வீட்டில் யாராவது ஒருவருக்கு கோபம் வருகிறது என்றால், சண்டை ஏற்படுகிறது. கோபம் வீட்டை மிகவும் துக்கமடையச் செய்கிறது. இங்கே கூட சிலருக்குள் கோபம் என்ற பூதம் இருக்கிறது என்றால் சிவபாபாவிற்கு கெட்ட பெயர் ஏற்படுத்துகிறார்கள் அல்லவா? பாபாவின் பெயரை கெட்ட பெயர் ஆக்கி விடுகிறார்கள் என்றால், தனது அதிர்ஷ்டத்தின் குறுக்கே கோடு போட்டு விடு கிறார்கள். கோபம் மிகப் பெரிய எதிரியாகும். எங்கே கோபம், சண்டை-துன்பம் இருக்கிறதோ அதற்கு நரகம் என்று கூறப்படுகிறது. கோபம் வீட்டின் பானையில் இருக்கும் தண்ணீரைக் கூட வற்ற வைத்து விடுகிறது என கூறுகிறார்கள். யாருக்குள் கோபம் இருக்கிறதோ அவர்களுக்கு கோபத்தினால் யாருக்கும் துக்கம் அளிக்காதீர், இல்லை என்றால் அதிர்ஷ்டத்தில் தடை விழுந்து விடும் என்று ஸ்ரீமத் கிடைக்கிறது. இதை பாபா புரிய வைக்கிறார். பதவியும் குறைந்து போகும். ஈஸ்வரனின் வாரிசுக்குப் பதிலாக அசுரனின் வாரிசாகி விடுவார்கள். தெய்வீக இராஜ்யம் உங்களுடைய இறை தந்தையின் பிறப்புரிமை என எழுதப்படுகிறது. சத்யுகத்தின் முழு ஆஸ்தியும் அடைவது உங்களின் பிறப்புரிமையாகும். முழுமையாக ஆஸ்தி அடைந்து லஷ்மி நாராயணன் ஆக வேண்டும். ஒரு வேளை யாராவது சொர்க்கத்தில் பிரஜைகள் வந்தால் கூட ஆஹா சௌபாக்கியம். உண்மையில் வருவார்கள் அல்லவா. மெல்ல மெல்ல ஸ்தாபனை நடந்துக் கொண்டிருக்கிறது. பிறகு அவர்கள் மூலமாக உறுதி மொழி எடுக்க வைக்கப்படுகிறது. கங்கனம் கட்டிக் கொள்ளுங்கள். யாரும் மறைத்து வாழ முடியாது.

இப்போது நீங்கள் பிராமணர்கள் ஈஸ்வரனின் வாரிசு. உங்களுடைய குலம் பெரியதா? அல்லது தெய்வீக குலம் பெரியதா? என பாபா கேட்கின்றார். எது உயர்ந்தது? (பிராமணர்கள்) நாம் தேவதைகளைக் கூட இவ்வளவு உயர்ந்தவர்கள் என கூற முடியாது. பிராமணர்கள் ஈஸ்வரிய குலத்தினர் ஆவர். இவர்கள் பாரதத்தை சொர்க்கமாக மாற்றுகிறார்கள். பிராமணர்களை குடுமிக்கு ஒப்பானவர்கள் என கூறுகிறார்கள். உண்மையில் சிவனின் கோவிலை உயர்ந்த மலையில் கட்ட வேண்டும். ஆனால் தற்காலத்தில் யாரும் போக முடியாது என்பதால் ஊருக்குள்ளேயே கட்டுகிறார்கள். உயர்ந்ததிலும் உயர்ந்தவர் சிவபாபா என்றால் அவருடைய கோவிலும் உயர்ந்த சிகரத்தில் இருக்க வேண்டும். இப்போது பாருங்கள் உலகத்தின் நிலைமை எப்படி ஆகியிருக்கிறது. அனைவருக்கும் அழிவு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. தந்தை வந்து அனைவரையும் விடுவிக் கிறார். சங்கமயுகத்தில் நீங்கள் அனைவரும் வளமாக இருக்கிறீர்கள். முழுமையாக 63 பிறவிகள் நரகவாசியாக இருந்தீர்கள். துல்லியமான கணக்கு இருக்கிறது. 21 பிறவிகள் சொர்க்கத்தில் ஆட்சி செய்து பிறகு விழுந்து கொண்டே வந்தீர்கள். கலைகள் குறைந்துக் கொண்டே போகிறது. நஷ்டம் அடைந்து இருக்கிறோம். 100-100 அலங்காரம்...... பழமொழி இருக்கிறது

அல்லவா. இதுவும் இச்சமயத்தின் பழமொழி ஆகும்.(கழுதையின் குழந்தைக்கு எவ்வளவு தான் அலங்காரம் செய் தாலும் அது மண்ணில் தான் புரளும்) நான் உங்களுக்கு அலங்காரம் செய்கிறேன். பிறகு விகாரம் மண்ணில் விழ வைத்து விடுகிறது. கோபம் என்ற மண் துன்புறுத்திக் கொண்டே இருக்கிறது. கோபக்காரர்களில் பலர் இருக்கிறார்கள். இம்சை கூட கோபம் அல்லவா? கோபம் இல்லாமல் சண்டையிட முடியாது. சொத்தின் பங்கு கிடைக்கவில்லை. கோபம் ஏற்பட்டது என்றால் சகோதரனைக் கூட அடித்து விடுகிறார்கள். இந்த சண்டை கோபத்தினால் ஆரம்பம் ஆகிறது. செல்லமான குழந்தைகளே! கோபப்படாதீர்கள், இல்லை என்றால், அதிர்ஷ்டம் நின்று போகும், மேலும் யார் துணைவனாக இருக்கிறார்களோ அவர்களின் அதிர்ஷ்டமும் தடைப்பட்டு போகும் என்று பாபா புரிய வைக்கிறார். கோபம் வரும் போது, நீங்கள் என்னுடைய வீட்டிற்கு வந்தால் கொன்று விடுவேன் என்று கூறுகிறார்கள்.

இப்போது பாபா தாய்மார்களாகிய உங்களை முன்னுக்கு வைக்கின்றார். நாம் சிவ சக்திகளாக கல்ப கல்பமாக மாறுகின்றோம் என அறிகின்றீர்கள். சிவபாபா வந்து நம்மை தன்னுடையவராக மாற்றுகின்றார். குழந்தைகளாகிய நீங்கள் இல்லை என்றால் தனியாக சிவபாபா என்ன செய்வார். பாரதத்தில் சிவ சக்திகளாகிய நீங்கள் பிரசித்தமானவர்கள். தங்களுடைய நினைவுச் சின்னமான கோவிலைப் பார்க்கவில்லை என்றால், அபுவில் பாருங்கள். அப்படியே உங்கள் நினைவு சின்னமாகும். யானை மீது சவாரி செய்பவர்களின் சித்திரங்கள் கூட இருக்கிறது. நீங்களும் இங்கே வந்து வசிக்கிறீர்கள். அதிசயமாக இருக்கிறது. கோவில்களுக்குச் சென்று இவர்கள் எப்போது வாழ்ந்து விட்டு சென்றனர் என அவர்களிடம் கேளுங்கள் என பாபா கூறுகின்றார். சிவஜெயந்தி கொண்டாடுகிறார்கள் என்றால், நிச்சயமாக வந்திருப்பார் அல்லவா? எப்போது எப்படி வந்தார் தெரியுமா? யார் பாரதத்தை வைரம் போன்று மாற்றினாரோ அவரது தொழிலை அறியவில்லை. தேவதைகள் தான் முதலில் பிராமணர்களாக இருந்தார்கள் அவர்களே வைரம் போன்று மாறுகிறார்கள். எந்த பிராமணர்கள் உதவி செய்தனரோ அவர்கள் தேவதையாகின்றனர். நீங்கள் அனைவரின் தொழிலைப் பற்றியும் புரிய வைக்க முடியும். ஆனால் மிகச் சிலரே புரிந்துக் கொள்வார்கள். ஏனென்றால் இராஜ்யத்தின் எல்லை இருக்கிறது அல்லவா? ஆகவே கோடியில் ஒரு சிலர் என்று கூறப்படுகிறது. மம்மா பாபா என்று கூறிவிட்டு கூட மறந்து போகிறார்கள். அய்யோ மாயாவே, நீ எவ்வளவு எதிரியாக இருக்கிறாய் ! இவ்வாறு நடந்துக் கொண்டே இருக்கிறது. பெரிய பெரிய தலைமை அதிகாரிகள் கூட இறந்து போகிறார்கள். குண்டு பாய்ந்து விடுகிறது. சிப்பாய்கள் நிறைய பேர் இறக்கிறார்கள். பெரிய பெரியவர்கள் இறக்கும் போது ஐயோ ! ஐயோ என்ற கூக்குரல் பரவுகிறது. சிவ சக்தி சேனையில் இன்னாரை மாயா கொன்று விட்டது. இதுவும் நடக்கத்தான் செய்கிறது. காலாட்படை இறந்து விட்டால் அவர்களைப் பற்றிய கவலை அவ்வளவு இல்லை. மகாரதிகள் இறந்து விடும் போது ஐயோ ! மாயை கொன்று விட்டதே என அனைவரும் கூறுவார்கள். சொர்க்கத்திற்குப் போக மாட்டார்கள் என்பதில்லை, வருவார்கள். ஆனால் கீழான பதவி கிடைக்கும். ஆகவே, இந்த வரிசையில் போக வேண்டாம் என பாபா கூறுகிறார். போன கல்பத்தில் சென்றவர்கள். இப்போதும் போகத்தான் செய்வார்கள். இன்னார் 4 வருடங்கள் தினமும் வந்தார். மாயை பிடித்து விட்டது என்று செய்திகள் எழுதுகிறார்கள். எப்படி ஈ இறந்து விட்டால் எறும்புகள் ஒரேயடியாக தின்று அழித்து விடுகிறது.

அது போன்று மாயையின் 5 பூதம் சத்திய நாசம் செய்து விடுகிறது.

இப்போது குழந்தைகளாகிய நீங்கள் அனைவரின் தொழிலையும் அறிகிறீர்கள். இஸ்லாமியர், பௌத்தர், கிறிஸ்தவர் எத்தனை பிறவிகள் எடுக்கிறார்கள் என்பதை நீங்கள் தான் அறிகிறீர்கள். எவ்வளவு புத்தியின் பூட்டு திறந்து விட்டது. ஞானத்தின் மூன்றாவது கண் கட்டாயம் கிடைத்து விட்டது. அனைத்தையும் விட முக்கியமானது கீதை என பாபா கூறுகின்றார். மற்றபடி அனைவரும் அவருடைய குழந்தைக் குட்டிகள். கீதை தான் தாய், தந்தையாக இருக்கின்றது, கீதை தாய் மற்றும் தந்தை சிவன் ஆவார். அவர்கள் மூலமாக நாம் பிறந்து கொண்டிருக் கின்றோம். அவ்வாறே மற்ற சாஸ்திரங்கள் அனைத்தும் அவர்களிடமிருந்து பிறக்கின்றது. அனைத்து ஆத்மாக் களுக்கும் தலைமையாக இருக்கக் கூடிய சிவபாபா மேலே இருப்பது போல் அனைத்து சாஸ்திரங்களுக்கும் மேலாக அனைத்து சாஸ்திரங்களின் தாயாக ஸ்ரீமத் பகவத் கீதை விளங்குகிறது. கிருஷ்ண பகவான் வாக்கு என போட்டதால் கீதையினுடைய பிரபாவம் பறந்து விட்டது. இதுவும் நாடகத்தில் இருக்கின்றது. முக்கியமான விஷயம் நிரந்தரமாக சிவபாபாவை நினைவு செய்துக் கொண்டே இருங்கள். யார் பாபாவின் ஸ்ரீமத்படி முழுமையாக நடந்துக் கொண்டி ருக்கிறார்களோ அவர்களின் நினைவும் வளர்ச்சி அடைந்துக் கொண்டி ருக்கும். எவ்வளவு கட்டளைக்குக் கீழ்ப் படிந்தவர்களாக, நன்றி உடையவர்களாக இருப்பார்களோ அவர்கள் பாபா நான் உங்களுக்கு அர்ப்பணம் ஆகின்றேன் என்பார்கள். தேகம் உட்பட அனைத்தையும் மறந்து தனியானவர் ஆக வேண்டும். இவ்வளவு சன்னியாசம் செய்ய வேண்டியிருக்கிறது. முற்றிலும் பந்தனத்திலிருந்து விடுபட்டவராக இருக்கிறார்கள். வந்துக் கொண்டே இருந்தாலும் கூட மோகத்தின் புழுக்கள் இருப்பது போல கணவர் அல்லது குழந்தைகளுடன் மோகம் இருந்தால் சிவபாபாவுடன் புத்தியை இணைக்க முடியாது. உண்மை யான மனதோடு பாபாவிற்கு அர்ப்பணம் ஆகாத வரை முடியாது. கட்டுக் கதைகள் கூறலாம். ஆனால் இதில் முழு மனதோடு அர்ப்பணம் ஆக வேண்டும். முழுமையாக டிரஸ்டி ஆக வேண்டும். ஒவ்வொரு அடியிலும் ஸ்ரீமத் எடுக்க வேண்டும். நிறைய குழந்தைகள் சிவபாபாவிற்கு கணக்கு வழக்கை அனுப்புகிறார்கள். திருமணம் செய்யட்டுமா, வீடு கட்டட்டுமா என்றும் கேட்கிறார்கள். செய்யுங்கள் பரவாயில்லை என பாபா கூறுவார். ஒரு போதும் வேண்டாம் என்று கூறுவதில்லை. பற்றி லிருந்து விடுபட்டு விட்டால் கேட்க வேண்டிய அவசியம் இல்லை. யாராவது விகாரத்தில் ஈடுபடலாமா... என்று கேட்டால் சரி, செய்யுங்கள் என்று கூறமாட்டார். இல்லை. இது முட்டாள் தனம் என்று கூறலாம். மற்றபடி எந்த ஒரு விஷயத்திலும் நஷ்டம் இல்லை என்றால் செய்யுங் கள், பற்றிலிருந்து விடுபட்டு என்ன விரும்புகிறீர்களோ செய்யுங்கள். நீங்கள் சேவையில் ஈடுபட்டுக் கொண்டே இருப்பீர்கள், பாபாவைப் பின்பற்றிக் கொண்டே செல்வீர்கள் என பாபாவிற்குத் தெரியும். இந்த பழைய குழந்தைகள் அனைவரும் அர்ப்பணம் ஆகிவிட்டர்கள் அல்லவா? அர்ப்பணத்திற்கும் மகிமை இருக்கிறது. அனைவரும் ஏழைகள். தாய்மார்கள் மிகவும் நல்லவர்கள். இவர்கள் எதை அர்ப்பணிக்க வேண்டும். பணக்காரர்கள் தான் அர்ப்பணிக்க வேண்டியிருக்கிறது. மனைவிக்கு எதையும் கொடுப்பதில்லை. யாரோ சிலரே மனைவியின் பெயரில் உயில் எழுதுகிறார்கள். இல்லை என்றால், குழந்தைகள் போன்றோர் அனைத்தையும் கொள்ளை அடித்து விடுகிறார்கள். இந்த காலத்திலோ யாரும் எதையும் கேட்பதில்லை.

பணம் கொடுத்தால் வேலை முடிந்து விடும். யாருடைய படகோ கவிழ்ந்து போகட்டும் என்று பொய் தீர்ப்பு கொடுத்து விடுகின்றனர். பாபாவிற்கு சுப்ரீம் நீதிபதி, சுப்ரீம் டீச்சர், சுப்ரீம் சத்குரு என கூறப்படுகிறது. பிறகு சுப்ரீம் தர்மராஜ் என்றும் கூறப்படுகிறது. அவருடைய தீர்ப்பில் முன்பின் என்று எதுவும் இருக்காது. நாடகத்தில் அவ்வாறு நிச்சயிக்கப்படவேயில்லை. ஆனால் இங்கேயோ ஒருவர் மற்றவர் மீது வழக்காடுவதற்கு நிறைய நீதி மன்றங்கள் உள்ளன. ஒரு சில இடங் களில் ஜனாதிபதியினுடைய தீர்ப்பைக் கூட ஏற்றுக் கொள்வதில்லை. செல்லமான குழந்தைகளே! அசரீரி ஆகுங்கள் என பாபா கூறுகின்றார். பாபாவுடன் செல்ல வேண்டும். பாபா வழிகாட்டி அல்லவா? விடுவிப்பர் என்றும் அவருக்குக் கூறுகின்றோம். அனைத்து பட்டங்களும் அவருக்கே! அமைதியை உருவாக்குபவரும் அவரே. தற்காலத்தில் இங்கே கூட அமைதியின் பரிசைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மாயை அமைதி அற்றதாக மாற்றக் கூடியதாகும். சத்யுகத்தில் அல்லது முக்தி தாமத்தில் அமைதி ஏற்படு கிறது. நிர்வாண தாமத்தில் முற்றிலும் அமைதி இருக்கிறது. சத்யுகத்தில் 100 சதவீதம் அமைதி, தூய்மை மற்றும் சுகம் இருககிறது. பெயரே சுகதாமம் ஆகும். துக்கதாமத்தில் அமைதி எங்கிருந்து வந்தது. சன்னியாசிகளுக்கு கொஞ்சம் நிறைய அமைதி இருக்கிறது. ஆனால் அதுவும் காக்கையின் எச்சிலுக்குச் சமம் சத்யுகத்தில் அவ்வாறு கூற மாட்டார்கள். இங்கே இராஜ்யம் கூட காக்கையின் எச்சிலுக்குச் சமம் ஆகும்.

மாயா மிகவும் அடிக்கும் என்று பாபா புரிய வைக்கிறார். உள்ளுக்குள் அரித்துக் கொண்டே இருக்கின்றது. உண்மையைக் கூற மாட்டார்கள். அழியாத சர்ஜனுக்கு முன்பு தெரிவிக்க வேண்டும் அல்லவா? இல்லை என்றால் பாவம் அதிகரித்துக் கொண்டே போகும். பிறகு மிகப் பெரிய தண்டனை இருக்கிறது. உண்மையைக் கூறுவதில்லை. சரி, இதற்கு மேல் பாவம் செய்யக் கூடாது அல்லவா? கெட்ட பெயரை ஏற்படுத்துவதற்கான தண்டனை மிகப் பெரியது. சொர்கத்திற்கு அதிபதியாக மாற்ற பாபா வந்திருக்கிறார். இதில் யார் தடையை ஏற்படுத்துகிறார்களோ அவர்கள் தண்டனைக்கு உரியவர்களாக மாறுகிறார்கள். அசுரர்கள் தடையை ஏற்படுத்து கிறார்கள். குழந்தைகளாகிய நீங்கள் தடைகளை ஏற்படுத்தக் கூடாது. இதிலும் குழந்தைகளாகிய உங்களுக்கு நன்மை இருக்கிறது. கோபப்படுபவரின் முகத்தைப் பார்ப்பது கூட பாவம் ஆகிறது. தீயவைகளைப் பார்க்காதீர்... கோபப்படுபவரின் முகத்தைப் பார்க்கக் கூடாது. பேராசையும் கூட குறைந்தது இல்லை. குழந்தை ராஜா காமம் ஆகும், அமைச்சர் கோபம் ஆகும். இவர்கள் இருவரும் பெரிய கொள்ளைக்காரர்கள், கோபம் பெரிய அழுக்கான கொள்ளைக்காரன் நல்ல குழந்தைகள் என்றால், பாபாவிடமிருந்து முழுமையாக ஆஸ்தி அடைந்து பெயரைக் காப்பாற்றுகிறார்கள். பெண் குழந்தைகள் என்னை விட புத்திசாலிகள் என பாபா கூறுகின்றார். சிவ பாபாவை காட்டிலும் புத்திசாலிகள் யாரும் இருக்க முடியாது. பாபா தான் குழந்தைகளை தலைமீது தூக்கி வைத்துக் கொள்கிறார். எல்லையற்ற பாப்தாதாவிற்கு குழந்தைகளின் மீது மதிப்பும் அன்பும் இருக்கிறது. ஒவ்வொரு பிள்ளையும் தனது இராஜ்ய பாக்கியத்தை அடைய வேண்டும், சதா சுகமாக இருக்க வேண்டும் என பாபா விரும்புகிறார். குழந்தைகளே! உயிரோடு இருங்கள். நீண்ட ஆயுள் உடையவராகுங்கள் என கூறுகிறார்கள். பாபா கற்றுக் கொடுக்கும் பாடங்களைக் கடைப்பிடித்து தன் மீது இரக்கம் காட்டுங்கள். ஸ்ரீமத் படி நடக்க வில்லை என்றால், அதிர்ஷ்டத்தில் தடையை ஏற்படுத்தி விடுவீர்கள். சிவபாபா

பரந்தாமத்தில் இருந்து சொர்க்கத் தின் ஆஸ்தியை அளிப்பதற்காக வந்திருக்கிறார் என உங்களுக்குத் தெரியும். யார் எவ்வளவு வேண்டுமானாலும் முயற்சி செய்யலாம். எவ்வளவு தன்மீது இரக்கம் காட்டிக் கொள்கிறீர்களோ அவ்வளவு தன்னை உயர்த்திக் கொள்ளலாம். விகாரத்தில் ஈடுபட்டால் தீபம் அணைந்து போகும். பிறகு ஞான எண்ணெய் தாரணை ஆகாது. நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு, ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. மனதால் சாஹிப்பிடம் (பாபா) முழுமையாக அர்ப்பணம் ஆகுங்கள். முழுமையாக டிரஸ்டி ஆகி, ஒவ்வொரு அடியிலும் ஸ்ரீமத்படி நடக்க வேண்டும். தேகம் உட்பட அனைத்தையும் மறந்து தனியாகி விட வேண்டும்.

2. குழந்தைகளாகிய பிறகு பாபாவின் காரியத்தில் தடையை ஏற்படுத்தக் கூடாது. எந்த ஒரு கெட்ட பெயர் ஏற்படும் படியான காரியமும் செய்யக் கூடாது. கட்டளைக்குக் கீழ்படிந்தவராக உண்மையுள்ளவராக மாற வேண்டும்.

வரதானம்: நேரம் மற்றும் வாயுமண்டலத்தை கண்டறிந்து தன்னை மாற்றிக் கொள்ளக் கூடிய அனைவருக்கும் பிரியமானவர் ஆகுக.

யாரிடத்தில் மாறக் கூடிய சக்தி இருக்கிறதோ, அவர் அனைவருக்கும் பிரியமானவராக ஆகின்றார். அவர் கருத்துக்களிலும் எளிமையானவராக இருப்பார். அவரிடத்தில் வளைந்து கொடுக்கும் சக்தி இருக்கும். அவர் ஒருபோதும் என்னுடைய கருத்து, என்னுடைய திட்டம், என்னுடைய சேவை இவ்வளவு நன்றாக இருந்தும் என்னுடையதை ஏன் ஏற்றுக் கொள்வது கிடையாது? என்று ஒருபோதும் கூறமாட்டார். இவ்வாறு என்னுடையது வருகிறது எனில் அலாய்(கலப்படம்) கலந்து விடுகின்றது. ஆகையால் நேரம் மற்றும் வாயுமண்டலத்தை கண்டறிந்து தன்னை மாற்றிக் கொண்டால் அனைவருக்கும் பிரியமானவர், நம்பர் ஒன் வெற்றியாளர்களாக ஆகிவிடுவீர்கள்.

சுலோகன்: பிரச்சனைகளை தீர்க்கக் கூடியவர்களாக ஆகுங்கள், பிரச்சனை சொரூபமாக அல்ல.